*13*

# பாவ நகரத்தில் இருந்த சபை

## (2:12–17)

பெர்கமுவில் இருந்த சபையானது "உண்மையற்று இருந்த உண்மையான சபை," "நரகத்தின் தலைநகரத்தில் இருந்த சபை," "பிசாசின் பின்முற்றத்தில் இருந்த சபை" என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. நான் இதன் தனிவகையான அறைகூவல்களை, "பாவ நகரத்தில் இருந்த சபை" என்ற தலைப்பில் தொகுத்துரைக்க முயற்சி செய்துள்ளேன்.

### கிறிஸ்து தேவைப்பட்ட ஒரு நகரம் *(2:12)*

இந்த சபைக்குழுமத்திற்கு எழுதப்பட்ட கடிதம் பின்வரும் வார்த்தைகளுடன் அறிமுகப்படுத்தப் படுகிறது: "பெர்கமு[1] சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ..." *(வசனம் 12).*

#### குறிப்பிடப்பட்ட நகரம்

இப்போது நாம் கடற்கரை ஓரமாகவே கடந்து செல்லுகின்றோம்.[2] நாம் எபேசுவில் தொடங்கிப் பின்பு சிமிர்னாவுக்குப் பயணமானோம். இப்போது நாம் இன்னும் சுமார் அறுபது மைல்கள் வடக்கு நோக்கிப் பயணப்பட்டு, ஆசியா மாகாணத்தில் ரோமத் தலைநகராய் இருந்த பெர்கமுவுக்கு வருகின்றோம். எபேசு, சிமிர்னா ஆகிய நகரங்களைப் போலின்றி, பெர்கமு கடலோரமாயிராமல், கடலில் இருந்து பதினைந்து மைல் தூரம் உள்நாட்டில் இருந்தது.

பெர்கமு நகரம் ஒரு மலையின்மீது ஸ்தாபிக்கப்பட்டு கீழிருந்த சமவெளிக்குப் பரந்து விரிந்து சென்றிருந்தது. இன்றைய நாட்களில், பெர்கமா என்ற நவீன நகரமானது பழங்கால நகரத்தின் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. பயணக்குழு ஒன்றுடன் நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது, முதலில் நாங்கள் அக்ரோபொலிஸ் [acropolis][3] என்ற பகுதிக்கும், பின்பு பெர்கமா நகரத்தில் உள்ள புதைபொருள் அகழ்ஆய்வு செய்யும் இடத்திற்கும், கடைசியில், பழங்கால மருத்துவ வளாகம் ஒன்றின் சிதிலங்களைக் காண்பதற்கு நகரத்தின் தென்பகுதிக்கும் சென்றோம்.

பெர்கமுவில் கர்த்தருடைய சபை எப்போது நிலைநாட்டப்பட்டது என்பதை நாம் அறிவதில்லை. ஆசியாவில் இருந்த மற்ற சபைக்குழுமங் களைப் போலவே, இதுவும் அனேகமாக, எபேசுவில் பவுல் மூன்று ஆண்டுகள் இருந்த காலகட்டத்திலேயே தோற்றுவிக்கப் பட்டிருக்கலாம் *(நடபடிகள் 19:10).* இந்த சபைக்குழுமம் விசேஷித்த பிரச்சனைகளை

எதிர்கொண்டிருந்ததா என்பது பற்றி நாம் எதுவும் அறிவதில்லை. இயேசு பெர்கமுவை, ''சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடம்'' என்றும், "சாத்தான் குடிகொண்டிருக்கிற இடம்" என்றும் அழைத்தார் (2:13). அந்த நகருக்குக் கிறிஸ்து மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டார்.

**விவரிக்கப்பட்ட கிறிஸ்து**

பயம் நிறைந்த அந்த உள்ளூர்ப் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள், கர்த்தரின் அதிகாரம் பற்றி உறுதிப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தில் இருந்தனர். இவ்விதமாகக் கிறிஸ்து தம்மை, "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர்" (வசனம் 12ஆ) என்று விவரித்தார். (பக்கம் 149 காணவும்.)

தேவனுடைய வசனம் ஒரு பட்டயம் என்று குறிப்பிடப்படுவதால் (எபிரேயர் 4:12; எபேசியர் 6:17), மற்றும் இந்தப் பட்டயம் இயேசுவின் வாயில் இருந்து புறப்படுவதால் (1:16; 2:16), இது தேவனுடைய வசனத்தைப் பற்றிய குறிப்பு என்பதில் பெரும்பான்மையானவர்கள் கருத்து ஒருமைப்படுகின்றனர். இருப்பினும் இந்த வசனம் எனப்படுவது சுவிசேஷம் அல்ல, ஆனால் கர்த்தருடைய விரோதிகள் மீது அவரது நியாயத்தீர்ப்பு என்பதாக இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் (ஏசாயா 49:2; வெளிப்படுத்தின விசேஷம் 19:15, 21).

ஒரு பட்டயம் என்பது, நற்கிரியைக்கான வகையிலோ அல்லது அழித்துப்போடும் வகையிலோ பயன்படுத்தப்பட முடியும், இதே விஷயம் வசனத்தைப் பொறுத்த வரையிலும் உண்மையானதாக உள்ளது. திறமைவாய்ந்த அறுவைச் சிகிச்சை மருத்துவரின் கைகளில் உள்ள அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படும் கத்தியைப்போல், வசனம் என்ற பட்டயமானது இருதயத்தை முறையாகக் குணப்படுத்துவதற்காக வெளிக்காட்டப்பட முடியும் (நடபடிகள் 2:37; எபிரேயர் 4:12). மற்ற சூழ்நிலைகளில், அது தேவனுடைய நியாயத்தின் கருவியாக பிரயோகிக்கப்பட முடியும் (யோவான் 12:48). இந்தப் பிந்திய பயன்பாட்டையே வெளிப்படுத்தின விசேஷம் 2ல், இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் (வசனம் 16).

ரோமாபுரியின் அதிகாரம் இயேசுவின் அதிகாரத்தை விடப்பெரியது அல்ல என்பதைப் பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார். அவரது காணப்பட இயலாத பட்டயத்துடன் ஒப்பிடுகையில், ரோமாபுரியின் பட்டயங்கள் சிறுபிள்ளைகளால் வடிவமைக்கப்பட்ட நயமற்ற மர ஆயுதங்களாய் இருந்தன. ஆகையால் கிறிஸ்தவர்கள், ரோமாபுரியின் பட்டயங்கள் தங்களைப் பயமுறுத்துவதை அனுமதிக்கக் கூடாதிருந்தது. அவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் பட்டயத்திற்கு மாத்திரம் பயப்பட வேண்டியதாய் இருந்தது (2:16).

## சாத்தான் அரியணையில் வீற்றிருந்த ஒரு நகரம் (2:13)

பெர்கமுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பொருளுரை,

அந்த சபைக்குழுமத்தைப் பற்றிய இயேசுவின் பாராட்டுதலுடன் தொடங்கிற்று.

**சாத்தான் அரியணையில் வீற்றிருந்த இடம்**

*முதலில் அவர், அவர்களுக்கு முன்பாக இருந்த பயங்கரமான அறைகூவலைத் தாம் அறிந்திருந்ததாக உறுதிப்படுத்தினார்: "... சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில்[4] நீ குடியிருக்கிறதை[5] ... அறிந்திருக்கிறேன்'' (வசனம் 13). வெளிப்படுத்தின விசேஷத்தில் பல நேர்மாறுகள் அடங்கியுள்ளன. அவற்றில், தேவனுடைய அரியணைக்கும் சாத்தானுடைய அரியணைக்கும் இடையில் உள்ள நேர்மாறும் ஒன்றாக உள்ளது. அதிகாரங்கள் 4 மற்றும் 5ல், நாம் தேவனுடைய அரியணையை அதன் எல்லா மகிமையோடும் காண்போம். அதற்கு முன்பாக, அதிகாரம் 2ல் நாம், சாத்தானும் தனது அரியணைகளைக் கொண்டுள்ளான் - அது அவனது அதிகாரமும் செல்வாக்கும் மையங்கொண்டுள்ள இடங்களாக உள்ளன - என்று அறிகின்றோம். பெர்கமு அப்படிப்பட்ட மையமாயிருந்தது.*

*விளக்கவுரையாளர்கள், "சாத்தானுடைய அரியணை (சிங்காசனம்)" என்று தாங்கள் நினைப்பதை விளக்கப் படுத்தவும் தற்காக்கவும் பக்கங்கள் பலவற்றை எடுத்துக் கொள்கின்றனர், ஆனால் முதுகு நரம்பில் நடுக்கத்தை அனுப்ப இந்தச் சொற்றொடர் மாத்திரமே போதுமானதாக உள்ளது. இந்த நகரமானது சாத்தானுடைய முயற்சிகள் அரங்கேற்றப்பட்ட இடமாக இருந்தது.*

*இயேசுவின் செய்தியைப் புரிந்து கொள்வதற்கு, சாத்தானின் அரியணை என்று எதையாவது ஒன்றைத் திட்டவட்டமாக அடையாளப்படுத்த வேண்டியது அவசியமில்லை, ஆனால் பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள் எதிர்கொண்டிருந்த தடைகளை மறுகண்ணோட்டம் இடுவதிலிருந்து நாம் பயன் அடைய முடியும்.*

*அரசியல்ரீதியாக சாத்தான் அரியணையில் வீற்றிருந்தான். பெர்கமு நகரம் ரோமாபுரியுடன் பலத்த பிணைப்புக்களைக் கொண்டிருந்தது. இது அந்த மாகாணத்தில், பேரரசருக்குக் கோவில் ஒன்றைக் கட்டுவதற்கு முதன்முதலாக உரிமையளித்த நகரமாய் இருந்திருந்தது. இன்றைய நாட்களில், நீங்கள் அந்தச் சமவெளியில் நின்று அக்ரோப்பொலிஸைக் கண்ணோக்கும்போது, ட்ரேஜன் பேரரசருக்கு அர்ப்பணிக்கப்பட்டதான, மறுகட்டுமானம் செய்யப்பட்ட வெள்ளைச் சலவைக்கற்களால் ஆன நினைவுச்சின்னமே மிகவும் மேலோங்கியுள்ள கட்டிட அமைப்பாக உள்ளது. பெர்கமு நகரமானது,* Thrice Neokorus[6] *என்று அறியப்பட்டிருந்ததைப் பெருமையாகக் கருதிற்று, இது பேரரசர்களைக் கனப்படுத்துவதற்கு மூன்று கோவில்களைக் கட்டும் சிலாக்கியத்தை பெற்றிருந்தது என்று குறிப்பிடும் பட்டமாக இருந்தது.*

*பெர்கமு நகரமானது கிழக்குத் திசையில் ரோமாபுரியின் பலத்த கோட்டையாக இருந்தது. இது ஆசியாவில் ரோம மாகாண அரசாங்கத்தின் மையமாக இருந்து, பேரரச வணக்கத்தை அமுல்படுத்தும் பொறுப்பைக்*

கொண்டிருந்தது. குடிமைப் பெருமை மாத்திரமேகூட, ஒவ்வொரு குடிமகனும் பேரரசின் கர்த்தத்துவத்தை ஒப்புக்கொள்ள நிலையான அழுத்தத்தைச் செலுத்தியிருந்தது.[7]

*மதரீதியாக சாத்தான் அரியணையில் வீற்றிருந்தான்.* பேரரசர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோவில்களுடன் கூடுதலாக, பெர்கமுவில் பிறமதக் கட்டிடங்களும் நிறைந்திருந்தன.[8] எடுத்துக்காட்டாக, அக்ரோபொலிஸில் இருந்த ஒரு கட்டிட அமைப்பான ஜீயஸ் என்ற கடவுளின் மேடையானது பழங்கால உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

ஜீயஸ்[9] என்பவர் கடவுளர்களில் பிரதானமானவராகக் கிரேக்கர் களாலும் ரோமர்களாலும் நம்பப்பட்டிருந்தார். ஒரு பெரிய வெற்றியைத் தொடர்ந்து, பெர்கமுவின் அரசர், ஜீயஸுக்குத் தனது மதிப்பை காண்பிப்பதற்காக மாபெரும் பலிபீடத்துடன் கூடிய ஒரு கட்டிடத்தைக் கட்டுவிக்க ஆணையிட்டார். அந்தக் கட்டிட அமைப்பு முழுமை பெற்ற போது, அது 120 அடிகள் நீளமும், 112 அடிகள் அகலமும், 20 அடிகள் உயரமும் கொண்டிருந்தது.[10] அதன் பக்கங்களில் கிரேக்கக் கடவுளர்கள் தங்கள் விரோதிகள் மீது கொண்ட வெற்றியைச் சித்தரிக்கும் ஒப்பனை இருந்தது. செதுக்கப்பட்ட இந்தச் சுவர்ச்சித்திரம் கலையின் பிரதான படைப்பாகக் கருதப்பட்டிருந்தது.

எகிப்தியக் கடவுளர்களுக்குக் கட்டப்பட்ட ஒரு கோவிலின் எஞ்சிய பகுதிகளைப் பாதுகாத்து வைத்துள்ள பெர்கமா நகரின் மையப்பகுதியில், புறதெய்வ வழிபாட்டிற்கான சிறந்த உதாரணம் இன்னொன்றைக் காண முடியும். கனத்த சிவப்புச் செங்கற்களினால் கட்டப்பட்ட அதன் சுவர்கள் ஆகாயத்தில் அறுபது அடிகளுக்கு மேற்பட்ட உயரம் கொண்டுள்ளன.

நகரத்தின் தெற்கில் உள்ள மருத்துவ வளாகம், சாத்தானுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த விக்கிரக ஆராதனை இடமாக இருந்தது. தூரத்திலும் அண்மையிலும் இருந்து வியாதிப்பட்டவர்கள் இவ்விடத்திற்குக் குணமாக்கப் படுவதற்காக வந்தனர். பிற்காலத்தில் கேலன் என்ற புகழ்பெற்ற மருத்துவர் (கி.பி. 130-200) அங்கு சிகிச்சை அளித்தார்.[11] புறதெய்வ வழிபாட்டின் மாயாவாதமும்[12] முற்கால மருந்துகளும் சேர்ந்த கலவைதான் அங்கு சிகிச்சை முறையாக இருந்தது.[13]

"பரிசுத்த சாலை" என்று அழைக்கப்பட்ட ஒரு நீண்ட வீதியில் சென்று இவ்வசதிகள் அடையப்பட்டன மற்றும் அடையப்படுகின்றன. குணமாக் கும் சிகிச்சையை நாடுகின்றவர்கள், தாங்கள் மரணத்தைப் பின்னே விட்டுச் செல்லும் நம்பிக்கையுடன் இதில் வெறுங்கால்களால் நடக்கின்றனர். நுழைவாயிலில் ஏஸ்குலாபியஸ்[14] என்ற கிரேக்கர் மற்றும் ரோமர்களின் குணமாக்கும் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பலிபீடம் உள்ளது. அந்த பலிபீடத்தின்மீது இந்தக் கடவுளின் சின்னம் நன்கு காணக்கூடிய வகையில் வைக்கப்பட்டுள்ளது: அது பின்னிப் பிணைந்த பாம்பு[15] என்ற சின்னமாக உள்ளது, இது பெரும்பான்மையான யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களால் பிசாசுடன் இணைவு கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது (ஆதியாகமம் 3:1-24; வெளிப்படுத்தின விசேஷம் 12:9; 20:2). ஏஸ்குலாபியஸுக்கு ஆராதனை என்பது தொடக்க காலக்

*கிறிஸ்தவர்களினால் குறிப்பாக வெறுக்கப்பட்டது.*

*கலாச்சார ரீதியாக சாத்தான் அரியணையில் வீற்றிருந்தான்.* பெர்கமு நகரம் ஒரு கடற்கரை நகரமாக இல்லாது இருந்தபடியால், அது வர்த்தகத்துறையில் எபேசுவுடனும் சிமிர்னாவுடனும் போட்டியிட முடியாதிருந்தது, எனவே அது கலாச்சாரத்தில் விசேஷித்த கவனம் செலுத்திற்று. "பெர்கமு நகரத்தில் கவிஞர்கள், தத்துவ ஞானிகள், அறிவியல் அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்கள் இருந்த காரணத்தினால் (அதன்) நற்பெயரானது அத்தேனே மற்றும் அலெக்சாண்டிரியா ஆகிய நகரங்களுக் குப் போட்டியானதாக இருந்தது."[16]

பெர்கமுவின் புகழ்பெற்ற மருத்துவர்கள் மற்றும் ஜீயஸ் கடவுளின் கலைவேலைப்பாடுள்ள பலிபீடம் ஆகியவற்றுடன், பெர்கமு நகரத்தின் நூலகம் என்பது இன்னொரு கலாச்சார சாதனையாக இருந்தது. அதில் 200,000 புத்தகங்கள் இருந்தன மற்றும் அது எகிப்திலுள்ள "அலெக்சாண்டிரி யாவுக்குப் போட்டியானதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது."[17] அலெக்சாண்டிரியாவுடனான இந்தப் போட்டியானது குறிப்பிடத்தக்க இரண்டு சாதனைகளை விளைவித்தது: (1) ஆசிய நூலகத்தின் மீது பொறாமை கொண்ட எகிப்திய மன்னர், ஆசியாவுக்கு பாப்பிரஸை[18] அனுப்ப மறுத்துவிட்டார். இது, பெர்கமுவில் இருந்த பிரதி எடுப்பவர்களை, எழுதும் பொருளாகத் தோலைப் பயன்படுத்தும் பழங்கால வழக்கத்தை நடைமுறைப் படுத்தும்படி கட்டாயப்படுத்திற்று. கைவினைக் கலைஞர்கள் "Pergamum" என்ற வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்ட parchment[19] (தோல்சுருள்) என்பதைப் பரிபூரணப்படுத்தும் வரை தங்கள் பரிசோதனையைத் தொடர்ந்தனர். (2) இந்தத் தோல்சுருள்கள் பாப்பிரஸைப் போல் அவ்வளவு நேர்த்தியாகச் சுருட்டப்பட முடியாதவை களாய் இருந்தன, எனவே பாரம்பரியத் தோல்சுருள்களுக்குப் பதிலாக வைப்பதற்கென்று பக்கங்களைக் கொண்ட புத்தகங்கள் உண்டாக்கப் பட்டன.[20]

பெர்கமுவின் கலாச்சாரம், மதிநுட்பம் கொண்டவர்களுக்கு விருப்ப மானதாக இருந்ததுடன் நின்றுவிடவில்லை. அந்தப்பகுதியில் இருந்த 10,000 இருக்கைகளைக் கொண்ட, விசிறிவடிவ அரங்கசாலை கண்ணுக்கு இனிய காட்சியாக இருந்தது, இது அக்ரோபொலிஸின் தென்மேற்குப் பகுதியில் இருந்த செங்குத்தான சரிவில் கட்டப்பட்டிருந்தது. எனது பயணக்குழு, எழுபத்தியெட்டு இருக்கை வரிசைகளில் மேல்வரிசையின்மீது நின்றபோது, மேடைப் பகுதியைக் கீழ்நோக்கிக் காணுதல் என்பது என்னை மயக்கம் அடையச் செய்தது. எங்களுக்கு நேர் முன்பாக, மலைச்சிகரங்களின் காட்சித்தோற்றம் இருந்தது. கீழே இடது புறத்தில் பெர்கமா நகரம் இருந்தது. மேலே ஆகாயமும், சூரியனும், மேகமும் மாத்திரம் இருந்தன.

நூலகம், அரங்கசாலை மற்றும் கலாச்சாரத்தின் பிற வெளிப்பாடுகள், ஆகியவை பெர்கமு நகரம் சாத்தானின் இருப்பிடம் என்று பெயர்பெற்றதில் என்ன செய்தன? மதிநுட்பம் மற்றும் கலைச் சார்பான தேடுதல்கள் என் பவை, பேரரசர், ஒரு புறதெய்வ தேவதை அல்லது இவ்விருவருடனும், எவ்வித மாறுதலுமின்றி இணைவு கொண்டிருந்தன. அரங்கசாலையில்

அரங்கேற்றப்பட்ட நிகழ்ச்சிகள், திராட்சரசத்தின் கடவுளான தியோனிசஸுக்குக் கனம் அளிக்கும் கொண்டாட்டங்களின் பகுதியாகவே விவரிக்கப் பட்டன. தியோனிசஸின் கோவிலின் சிதிலங்களை இன்னமும் மேடைப்பகுதியின் வடக்கு முனையில் காண முடியும்.

*ஒழுக்கரீதியாக சாத்தான் அரியணையில் வீற்றிருந்தான்.* ஒழுக்கவீனம் - விசேஷமாக பாலியல் ஒழுக்கவீனம் - என்பது பெர்கமு நகரத்தின் அரசியல், மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பாகமாக இருந்தது. அந்த நகரத்தின் குடிமக்கள், "... வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், ... வெறிகள், களியாட்டுகள்'' போன்ற ''மாம்சத்தின் கிரியைகளில்" நிபுணர்களாய் இருந்தனர் (கலாத்தியர் 5:19-21அ).

பெர்கமுவைப் பற்றி நான் எவ்வளவு அதிகமாய்க் கற்றுக்கொள்ளு கின்றேனோ, அவ்வளவு அதிகமாய் நான், லாமார் பெர்ரெட் அவர்களுடன் கருத்து ஒருமைப்படுகின்றேன். ஜீயஸின் பலிபீடத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர், "அனேகமாக, இந்த பலிபீடம் அல்ல ஆனால் *பெர்கமு நகரமே சாத்தானின் அரியணையாக* இருந்தது எனலாம்" என்று எழுதினார்.[21] அதன் குடிமக்களுடைய சிந்தைகள், இருதயங்கள், மற்றும் வாழ்வு ஆகியவற்றில் சாத்தான் அரியணையிட்டு வீற்றிருந்தான்.

ஆயிரக்கணக்கான மக்களின் சிந்தனையைச் சாத்தான் தன்வசமாய் இழுக்கும் அதேபோன்ற மையங்களை - முறையற்ற, குறைகாணும் போக்குடைய, இன்பத்தை நாடுகின்ற மக்களைக் கவரக்கூடியவையாக உள்ள இடங்களை - இன்றைய நாட்களில் சாத்தான் கொண்டிருக்கின் றானா? சாத்தானுடைய செல்வாக்கைப் பெற்றுள்ள அப்படிப்பட்ட பல ஆதாரமூலங்கள் நினைவுக்கு வருகின்றன: உலகத்தின் பெரிய நகரங்கள், அரசியல் அதிகாரத்தின் மையங்கள், காமவிகார சந்தோஷத்திற்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட பகுதிகள், உலகரீதியான பல்கலைக் கழக வளாகங்கள் முதலியன.[22] இவற்றுடன் நாம், புத்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி போன்ற தொடர்பு சாதனங்களையும் கூட்ட முடியும்.[23] சாத்தான் இன்றைக்கும் உலகத்தை வந்தடைவதற்கான தனது அதிகாரத்தின் இருக்கைகளைக் கொண்டுள்ளான்!

### சீஷர்கள் அபாயத்திற்கு உள்ளான இடம்

நாம் இப்போது, இந்த சபையைக் குறித்து இயேசுவின் பாராட்டு ரையை மதிக்கத் தயாராக இருக்க வேண்டும்: "... சாத்தானுடைய சிங்காசன மிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும், ... என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்'' (வசனம் 13அ, இ). பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள், பரிவிரக்கமற்ற சூழ்நிலைகளில் இருந்தும்கூட, விசுவாசம் உள்ளவர்களாய் நிலைத்திருந்தனர்!

அவர்கள் இயேசுவின் நபர்த்துவத்தை மாத்திரமின்றி, இயேசுவின் ஆணைகளையும் பற்றிக்கொண்டிருந்தனர். மூலவசனத்தில், "என்னைப் பற்றும் விசுவாசம்" ["My faith"] என்பது "என்னுடைய விசுவாசம்" ["the faith of Me"] என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. வழக்கமாக, "faith" என்ற

கிரேக்க வார்த்தைக்கு முன்னால் திட்டவட்டச் சுட்டுச் சொல் ["the"] காணப்படும்போது, "faith" என்பது "இயேசுவில் விசுவாசத்தை மையங்கொண்ட போதனையின் அமைவு" என்பதைக் குறிக்கிறது - வேறு வார்த்தைகளில், இது கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு முழுவதையும் குறிக்கிறது.[24] இயேசு என்னவாக இருந்தார் மற்றும் எவற்றையெல்லாம் போதித்தார் என்ற யாவற்றையும் அவர்கள் விசுவாசித்தனர்.

மேலும், அவர்கள் மரணத்திற்கு உட்படுத்தப்படப் போவதாக அச்சுறுத்தப்பட்ட நிலையிலும்கூட, அவர்கள் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தனர்: "சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான[25] அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட[26] நாட்களிலும்" (வசனம் 13இ, ஈ). சிமிர்னாவில் இருந்த சபைக்குழுமம், "இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்" என்று எச்சரிக்கப்பட்டிருந்தது (2:10ஆ). சிமிர்னாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு மிகமோசமானவைகள் இனி வருபவைகளாய் இருந்தன, ஆனால் பெர்கமுவில் சாத்தான் தனது தசைகளை ஏற்கனவே இளக்கப்படுத்தியிருந்தான். அந்த நகரத்தில் முதல் கிறிஸ்தவர் (மரித்து) வீழ்ந்திருந்தார்.

அந்திப்பா என்பவர் யார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் கர்த்தர் அறிவார். அவர் இளைஞரா, முதியவரா, திருமணமானவரா ஆகாதவரா, (உலகமானது வெற்றி என்பதைக் கண்ணோக்குகிறபடி) அவர் வெற்றி பெற்றவரா வெற்றி பெறாதவரா என்பவற்றைப் பற்றி நாம் அறிவதில்லை; ஆனால் அவரை இயேசு, "எனக்கு உண்மையுள்ள சாட்சியான" என்று அழைத்தார் என்பதை நாம் அறிகின்றோம். இது ஒன்றுதான் கடைசியில் பொருட்படுத்தப்படும் விஷயமாக உள்ளது.

## சபையின்மீது செல்வாக்குச் செலுத்திய ஒரு நகரம் (2:14, 15)

கடிதம் அத்துடன் முடிந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன், ஆனால் வசனம் 14, "ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என்ற குளிரூட்டும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது. இயேசு, "சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என்ற கருத்தைக் கொண்டிருக்கும்போது, பதட்டம் கொள்ளவேண்டிய வேளையாக உள்ளது! 1961ல் எலி விஷத்தை உண்டு மரித்த ஒருவரின் சவ அடக்கத்தை நான் நடத்தினேன். எலி விஷம் என்பது *கொஞ்சம் மாத்திரம்* ஆர்செனிக் துகள்கள் கலந்த, சோளமாவு உணவாகவே இருந்தது - ஆனால் அம்மனிதர் இறந்துவிட்டார்.[27]

பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கர்த்தர் கொண்டிருந்த "சில காரியங்கள்" யாவை?

> ... விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும்[28] வேசித்தனம்பண்ணுவதற்கும்[29] ஏதுவான இடறலை[30] இஸ்ரவேல்

*புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு, அதை நான் வெறுக்கிறேன் (வசனங்கள் 14ஆ, 15).*

பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள், தவறானவற்றைப் போதிப்பவர் களை அனுமதித்து, அவர்கள் தங்களுடன் தங்கியிருக்க அனுமதித்திருந்தனர் என்பது தெளிவு. எபேசுவில் இருந்த சபை, கள்ளபோதகர்களைச் *சகித்துக் கொள்ளாது* இருந்ததற்காக அதை இயேசு *பாராட்டியிருந்தார்;* இப்போது அவர் பெர்கமு சபையை அதன் *சகிப்புத் தன்மைக்காகக் கண்டனம் பண்ணினார்.*

**சமரசம் செய்துகொள்வதைப் பிரசங்கித்த மனிதர்கள்**

இயேசு குறிப்பிட்ட இந்தக் கள்ளப் போதகர்கள் யாராயிருந்தனர்? "பாலாமின் போதனை" மற்றும் "நிக்கொலாய் மதஸ்தரின் போதனை" என்ற குறிப்புப் பெயர்கள் அனேகமாக, தேவபக்தியற்ற ஒரேவிதமான செய்தியைக் குறிப்பிடுகின்ற இரு வழிமுறைகளாக மாத்திரம் இருந் திருக்கலாம்.[31] உற்பத்தியாளர்கள் சிலவேளைகளில் ஒரேவிதமான பொருளை உற்பத்தி செய்து, அதன்மீது மாறுபட்ட அடையாளப் பெயர்களை இடுகின்றனர். அதுபோலவே, நாசமாக்கும் ஒரு போதனையை உண்டாக்கிய சாத்தான், அதை மாறுபட்ட பல பெயர்ச் சீட்டுகளின்கீழ் சுற்றுக்கு விட்டிருந்தான்.

"பாலாமின் போதனையை"ப் பற்றி அறிவதற்கு, எண்ணாகமம் 22 முதல் 25 வரை உள்ள அதிகாரங்களில், பாலாம் மற்றும் பாலாக் ஆகியோரைப் பற்றிய விபரங்களைக் கொண்டு தொடங்குங்கள்: பாலாம் இஸ்ரவேல் மக்களை சபித்தால், அவருக்குப் பெருந்தொகை தருவதாக பாலாக் வாக்களித்தார், ஆனால் அந்தத் தீர்க்கதரிசியால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அடுத்து என்ன நடந்தது என்பதை அறிவதற்கு நீங்கள் வேதாகமத்தின் பிறபகுதிகளுக்குச் செல்ல வேண்டும்: பாலாக்கினால் அளிக்கப்பட்ட பெருஞ்செல்வத்தை ஈட்டிக்கொள்வதற்காக (2 பேதுரு 2:15; யூதா 11), பாலாம் ஒரு தந்திரமான திட்டத்துடன் வந்தார். உண்மையில் அவர் பாலாக்கிடம், "நான் இஸ்ரவேல் மக்களை சபிக்க முடியாது, ஆனால் அவர்களின் ஆண்களைப் புறதெய்வ வழிபாடு மற்றும் பாலியல்ரீதியான ஒழுக்கக்கேடு ஆகியவற்றில் ஈடுபடுத்திப் பாழாக்குவதற்கு நீர் உமது பெண்களைப் பயன்படுத்தினால், தேவன்தாமே அவர்களை சபித்து விடுவார்" என்று கூறினார். பாலாமின் அறிவுரையைப் பாலாக் பின்பற்றினார், இதன் விளைவாக 24,000 இஸ்ரவேல் மக்கள் வாதிக்கப் பட்டனர் (எண்ணாகமம் 25).[32] பிற்பாடு மோசே, இதை "*பிலேயாமின் ஆலோசனையினால்* இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தானே" என்று எழுதினார் (எண்ணாகமம் 31:16அ).[33] பெர்கமு நகரத்தில் புறதெய்வ வழிபாட்டுக் கலாச்சாரத்தில் கிறிஸ்தவர்கள் ஈடுபடுதல் அவர்களுக்கு

ஏற்புடையதே என்று “பாலாமியர்கள்” போதித்தனர் என்பதில் சந்தேகம் இல்லை.

எபேசுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பிற்பகுதியைப் பற்றிய படிப்பில் நாம், முன்பே நிக்கொலாய் மதஸ்தரைப் பற்றிக் கண்டோம் (2:6).[34] நிக்கொலாய் மதஸ்தர் ஒழுக்கவீனத்தை நடைமுறைப் படுத்திய உணரா அறிவினர் என்று கிறிஸ்தவ எழுத்தாளர்கள் அடையாளப் படுத்தினர். உணரா அறிவினர் என்பதற்கான ஆங்கில வார்த்தையான “Gnostic” என்பது, “அறிவு” என்பதற்கான கிரேக்க வார்த்தையில் (*gnosis*) இருந்து வருகிறது. உணரா அறிவினர், மற்றவர்களுக்குக் கிடைத்திராத அறிவும் உட்கண்ணோக்கும் தாங்கள் கொண்டிருந்ததாக உரிமை கோரினர். தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் தாம் விரும்புகின்ற எல்லாப் பாவத்தையும் செய்யக்கூடும், அவர் மனந்திரும்பினாலும் இல்லை யென்றாலும், அவரது பாவத்தைத் தேவகிருபை மூடிவிடும் என்பது உணரா அறிவினரின் புகழ் பெற்ற போதனையாக இருந்தது. இவ்விதமாக அவர்கள், “தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்குக்கேதுவாகப் புரட்டி”ப் போட்டனர் (யூதா 4).[35]

பாலாமியரும் நிக்கொலாய் மதஸ்தரும் தவறானவற்றைப் போதித்து, தேவனுடைய பிள்ளைகளைப் பாவம் செய்யும்படி ஊக்குவித்தனர்.

**சமரசம் செய்துகொள்வதை நடைமுறைப் படுத்திய உறுப்பினர்கள்**

கள்ளப்போதகர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றிப் புதிய ஏற்பாடு தெளிவாக உள்ளது: அவர்களின் போதனையைக் கவனித்து, “அவர்களை விட்டு விலகவேண்டுமென்று” என்று பவுல் கூறினார் (ரோமர் 16:17). அவர் கிறிஸ்தவர்களுக்கு, “எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி (ஏவுதல் பெற்ற போதனையின்படி) நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று” கூறினார் (2 தெசலோனிக்கேயர் 3:6). தவறான போதகரை ஊக்குவிக்கின்றவர்கூட, “அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்” என்று யோவான் கூறினார் (2 யோவான் 11).

பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள் இந்தத் தெளிவான ஆணை களுக்குக் கீழ்ப்படியாதிருந்தது ஏன்? ஒருவேளை இந்தக் கள்ளப் போதகர்கள் சபைக்குழுமத்தில் நண்பர்களைக் கொண்டிருந்து இருக்கலாம், அவர்களை ஒழுங்குபடுத்துதல் என்பது சபையில் பிரச்சனைக்குக் காரணமாகும் என்று நடத்துநர்கள் நினைத்திருக்கலாம். ஒருவேளை சபையின் உறுப்பினர்கள், தவறு செய்யப்படுதலைச் சகித்திருக்க நேர்ந்தாலும், வெறுப்புணர்வு மிகுந்த உலகத்தில் ஒன்றிணைந்த முன்னணியை முன்நிறுத்துவது அவசியம் என்று நினைத்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் பிரச்சனையை அப்படியே விட்டுவிட்டால் அது தானாகவே மறைந்துபோகும் என்று நினைத்திருக்கலாம். அவர்களின் தர்க்கம் எதுவாக இருந்தாலும், கள்ளப்போதனை பற்றிய, அவர்களின் “வாழு - வாழவிடு” என்ற கொள்கையானது கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப் படாததாக இருந்தது!

# இயேசுவினால் விரைவில் சந்திக்கப்படவிருந்த ஒரு நகரம் (2:16, 17)

**அபாயத்தின் சாத்தியக்கூறுகள்**

இயேசு, "நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" என்று எச்சரித்தார் (வசனம் 16).

பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள், தங்களுக்குத் தவறைப் போதித்தவர்களை எதிர்த்து நின்று, அவர்களை மனமாற்ற முயற்சி செய்திருக்க வேண்டியதாயிருந்தது (எசேக்கியல் 3:18-21). கள்ளப் போதகர்கள் மாற மறுத்தால், அவர்கள் சபையிலிருந்து "விலக்கிவைக் கப்பட" வேண்டியிருந்தது (1 கொரிந்தியர் 5:13; KJV; வசனங்கள் 1 முதல் 12 வரையில் உள்ள பகுதியையும் காணவும்). மேலும், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. "இவ்விஷயத்தை நீ உடனடியாகத் தீர்த்து வைக்காவிட்டால், *நான்* விரைவில் வந்து அதைப் பற்றி நடவடிக்கை மேற்கொள்வேன் - நான் அதைச் செய்யும்போது நீ மகிழ்ச்சியாய் இருக்க மாட்டாய்" என்பதே இயேசுவின் எச்சரிக்கையினு டைய மறைமுகமான கருத்தாக இருந்தது.[36]

"நான் வந்து" என்ற சொற்கள் உலகத்தின் முடிவில் நடைபெறும் இரண்டாம் வருகையைக் குறிப்பிடாத, ஆனால் இந்த வாழ்க்கையிலேயே துன்மார்க்கரைத் தண்டிப்பதற்காகப் பரலோகத்திலிருந்து கர்த்தர் வருவதைக் குறிக்கிற வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது.[37] கர்த்தர் தமது நியாயத்தீர்ப்பின் பயங்கரமான பட்டயத்தை எவ்வாறு பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார் என்பதைக் கூறவில்லை, ஆனால் நாம் "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" என்பதை அறிந்துள்ளோம் (எபிரேயர் 10:31).

இயேசுவின் எழுத்துக்களில், "உன்னிடத்தில்" மற்றும் "அவர்களோடே" என்பவற்றிற்கு இடையில் உள்ள நேர்மாறைக் கவனியுங்கள்: "நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர் களோடே யுத்தம்பண்ணுவேன்." "உன்னிடத்தில்" என்பது அனேகமாக, சபை முழுவதையும் குறிப்பதாயிருக்கையில், "அவர்களோடே" என்பது தவறைப் பரப்பியவர்களைக் குறிப்பதாயிருக்கலாம்.[38] கள்ளப்போதகர் களைத் தண்டிக்க இயேசு வரவிருந்தார் என்ற உண்மையானது, தண்டிக்கப் படவிருந்தவர்களினிமித்தம் சபையானது அக்கறைகொள்ளக் காரணமாய் இருந்திருக்க வேண்டும் (கலாத்தியர் 6:1). சபையானது தனது சொந்தப் பாதுகாப்புக் குறித்தும் அக்கறை கொண்டிருக்க வேண்டும். தேவபக்தியற்ற வர்கள் மீது கர்த்தர் தமது பட்டயத்தை வீசும்போது, அவர்களை விட்டுத் தொலைவில் இருக்கத் தவறியவர்கள்மீதும் அது விழாதிருக்காது (எசேக்கியல் 3:18). இங்கு இயேசு, "நான் கள்ளப்போதகர்கள் மீது ஒரு குண்டை வீசப் போகின்றேன்; நான் அவ்வாறு செய்யும்போது அவர்கள் இன்னமும் உங்கள் மத்தியில் இருந்தால், நீங்களும் அவர்களோடு

அழிக்கப்படுவீர்கள்!” என்று கூறுவதுபோல் உள்ளது.

திருத்துகின்ற ஒழுங்குபடுத்துதல்[39] என்பது ஒருபோதும் சுலபமானதாக இருப்பதில்லை, ஆனால் இது அத்தியாவசியமானதாக உள்ளது: இது சபையின் தூய்மைக்கு, சபையின் நற்பெயருக்கு, இரட்சிக்கப்பட்டவர்களை இரட்சிக்கப்பட்டவர்களாகக் காத்துக்கொள்வதற்கு அத்தியாவசியமானதாக உள்ளது.[40]

**மதிப்புமிக்க வாக்குத்தத்தங்கள்**

எல்லாக் கடிதங்களிலும் போன்றே இயேசு, ஒவ்வொரு உறுப்பினரும் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை மேற்கொள்ளும்படிக்கு அறைகூவல் விடுத்தார்: “ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' (வசனம் 17அ). கேட்பதற்கும் கீழ்ப்படிவதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக, இயேசு விசேஷித்த வாக்குத்தத்தங்களை வெளிக்காட்டினார்: “ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்” (வசனம் 17ஆ, இ).

இந்த வாக்குத்தத்தத்தின் - “மறைவான மன்னா” வின் குறிப்பாக உள்ள - முதல்பாகமானது பழைய ஏற்பாட்டில் தனது வேர்களைக் கொண்டுள்ளது. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, தேவன் அவர்களுக்கு மன்னா என்ற உணவை அளித்துக் காப்பாற்றினார் (யாத்திராகமம் 16:13-36; சங்கீதம் 78:24).[41] மன்னா உள்ள ஒரு பாத்திரம் உடன்படிக்கைப் பெட்டியினுள் வைக்கப்பட்டது[42] (இவ்விதமாக அது “மறைவானதாக” இருந்தது), இது தேவன் தமது மக்களுக்குத் தேவையானவற்றை அளிக்கின்றார் மற்றும் தொடர்ந்து அவ்வாறு அவர்களுக்கு அளிப்பார் என்பதற்கான நிலையான நினைவூட்டுதலாக இருந்தது (யாத்திராகமம் 16:33, 34; எபிரேயர் 9:4). அதுபோலவே, பெர்கமுவில் கீழ்ப்படிதலுடன் இருப்பவர்களுக்குத் தேவையானவற்றையும் கர்த்தர் வழங்குவார்.[43]

இந்த வாக்குத்தத்தத்தின் இரண்டாம் பாகம் அவ்வளவு தெளிவாக இருப்பதில்லை: “... அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்” (வசனம் 17இ). “வெண்மையான கல்” என்ற குறிப்பானது, அங்கீகரித்தல் அல்லது அங்கீகரியாதிருத்தல் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதற்குப் பழங்காலத்தில், ஒரு வெண்மையான மற்றும் ஒரு கருப்பான இரண்டு கூழாங்கற்களைப் பயன்படுத்தும் நடைமுறையைக் குறிப்பதாக இருக்கலாம்.[44] தேவன் ''வெண்மையான கல்லை'' தருதல் என்பது தேவனால் அங்கீகரிக்கப்படுதலுக்குச் சமமானதாக இருந்தது![45]

“அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவரும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமம்” என்றால் என்ன?

அடுத்த அதிகாரத்தில் இயேசு தமது ''சொந்த புதிய நாமத்தை''க் குறிப்பிட்டார் (3:12; NRSV).[46] "புதிய நாமம்" என்பது "இயேசு" என்ற பெயராக மாத்திரம் இருக்கலாம்.[47] "இயேசு" என்ற நாமத்தைக் குறித்துப் புதியது ஒன்றுமில்லையே என்று எவரேனும் மறுப்பு உரைப்பார்கள் என்றால், அவரை அன்புகூர்ந்து மதிக்கின்றவர்களுக்கு அது எப்போதுமே புதியதாக உள்ளது என்று நான் பதில் அளிப்பேன்.

நான் கேட்க விரும்பும் நாமம் ஒன்றுண்டு,
நான் அதன் மதிப்பைப் பாட விரும்புகின்றேன்;
அது என் காதில் இசைபோல் ஒலிக்கிறது,
அது பூமியின் மிகவும் இனிய நாமமாகும்.[48]

இயேசுவினால் இரட்சிக்கப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே, "இயேசு" என்ற நாமத்தை[49] உண்மையாகவே ''அறிந்து'' (புரிந்து மற்றும் மதித்து) இருக்கின்றனர் (நடபடிகள் 4:12ஐக் காணவும்)!

## முடிவுரை

பெர்கமுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதம், கிறிஸ்தவராக இருத்தல் என்பது சுலபமானது அல்ல என்று அறிவிக்கிறது. போதுமான தைரியத்துடன் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்பவர்களை, விளைவுகள் எது நேர்ந்தாலும் விசுவாசத்தை மறுதலிக்காதவர்களை இயேசு இன்னமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். தெய்வீகத் தர அளவைக்கு உறுதிப்பட்டிராத வாழ்வையும் போதனையையும் கொண்டுள்ள சகோதர சகோதரிகளைப் போதுமான அன்புடன் எதிர்த்து நிற்பவர்களையும் அவர் இன்னமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். சமரசம் செய்து கொள்ளுதல் என்பதைக் கர்த்தரால் சகித்துக் கொள்ள முடியாது.

இந்தக் கடிதமானது, நாம் யாவரும் "ஜெயங்கொள்ளுகின்றவர்களாய்" இருக்கும்படி நமக்கு அறைகூவல் விடுகிறது: நமது கோழைத்தனம், நமது அக்கறையின்மை, நமது உறுதிப்பாட்டில் குறைபாடு ஆகியவற்றை வெற்றிகொண்டு, இயேசு விரும்புகின்றவாறு நாம் இருக்க வேண்டும். அவ்வாறு நாம் இருந்தால், அவர் அதுபோலவே, வழங்குதலின் "மறைவான மன்னா" வையும் அங்கீகாரத்தின் "வெண்மையான கல்லையும்" நமக்குத் தருவார்.

உங்கள் வாழ்வில் நீங்கள் ஆவிக்குரிய தேவையொன்றைக் கொண்டிருந்தால்,[50] உங்கள் இருதயத்தை வசனமாகிய பட்டயம் தொடவேண்டும் என்றும், அது உடனடியாகக் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்படி உங்களை அசைக்க வேண்டும் என்றும் நான் ஜெபிக்கின்றேன் - அப்போது அவர் நியாயத்தீர்ப்பு என்ற தமது பயங்கரமான பட்டயத்தைக் கொண்டு உங்களுக்கு எதிராக ஒருபோதும் போராட வேண்டியிராது (மத்தேயு 25:41)!

# போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தப் பாடத்திற்குச் சாத்தியமான பிற தலைப்புக்களில், "சாத்தான் குடியிருந்த இடம்," "சாத்தான் தனது அரியணையைக் கொண்டிருந்த இடம்," மற்றும் "சோதிக்கப்பட்ட சபை" ஆகியவை உள்ளடங்குகின்றன. "சாத்தானுடைய இடத்தில் சபை" என்பது அமெரிக்காவில் அவ்வப்போது பயன்படுத்தப்படுகின்ற தலைப்பாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]இந்த நகரம், பெர்கமுஸ், பெர்கமன் மற்றும் பெர்கமோஸ் என்றும் அறியப்பட்டிருந்தது. KJV வேதாகமத்தில் "Pergamos" என்றுள்ளது. [2]இந்தப் புத்தகத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும். [3]"அக்ரோபொலிஸ்" என்பது "உயர்ந்த நகரம்" என்று அர்த்தப்படுகிற கிரேக்கக் கூட்டுவார்த்தையாக உள்ளது. அக்ரோபொலிஸ் என்பது மலையின்மீது இருந்த தொடக்ககால நகரத்தின் இடமாக உள்ளது. [4]KJV யில் "seat" என்றுள்ளது, ஆனால் "seat" என்பதற்கான வழக்கமான கிரேக்க வார்த்தை இவ்விடத்தில் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, இவ்வசனப் பகுதியானது நாம் "throne" என்ற வார்த்தையைப் பெற்றுக்கொண்டுள்ள "*thronos*" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. இதே வார்த்தையானது அதிகாரம் 4ல் தேவனுடைய அரியணையைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "அரியணை" என்ற வார்த்தையானது "அதிகாரத்துவத்தின் இருக்கை" என்பதைக் குறிப்பிடுகிறது. [5]இந்த வாக்கியத்தில் "dwell" மற்றும் "dwells" ("குடியிருக்கிற") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "நிரந்தரமான குடியிருப்பைக் கொண்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. [6]நடபடிகள் 19:35ல் (NASB) *neokoros* என்பது "கோவிலைப் பாதுகாப்பவன்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. [7]பெரும்பாலான நகரங்களில், குடிமக்கள், பேரரசருடன் தங்களுக்கு உள்ள உடன்படிக்கை உறவை ஆண்டுக்கு ஒருமுறை மாத்திரம் வாக்குக்கொடுக்க வேண்டியிருந்தது; பெர்கமுவில் இதற்கான அழுத்தம் தொடர்ந்து நடந்திருக்க வேண்டும். சிமிர்னாவில் இருந்த சபைக்கு எழுதிய கடிதத்தில், உபத்திரவம் யூதர்களால் துவக்கி வைக்கப்பட்டது; ஆனால் பெர்கமுவில், ரோம அதிகாரிகளே உபத்திரவத்தின் அச்சுறுத்தலை வெளியிட்டிருப்பார்கள். [8]அந்தப் பகுதியில் இருந்த ஒரு கோவில், விவசாயத்தின் கடவுளான டெமெட்டருக்கு அர்ப்பணிக்கப் பட்டிருந்தது. அந்தக் கோவிலின் சிதிலங்களுக்கு அருகில், "அறியப்படாத தேவனுக்கு" அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பலிபீடத்தைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர், இது நடபடிகள் 17:23ல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஒப்பான ஒரு கல்வெட்டு எழுத்தாக உள்ளது. [9]ரோமர்கள் இவரை, "ஜுப்பிட்டர்" என்று அழைத்தனர். [10]இன்றைய நாட்களில், அக்ரோபொலிஸின் அஸ்திபாரம் மாத்திரமே எஞ்சியுள்ளது. பலிபீடமானது பெர்லினில் உள்ள பெர்கமு காட்சிக் கூடத்தில் மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. அஸ்திபாரத்தின் மையத்தில் வளர்ந்துள்ள ஒரு பெரிய மரத்தை, சமவெளிப் பகுதியிலிருந்து தெளிவாகக் காணமுடியும். அதன்

பிரசன்னமானது முதல் நூற்றாண்டில் இப்பலிபீடத்தின் காட்சியைப் பயணிகள் பார்வைக்குக் கொண்டுவர உதவுகிறது. அதைப் பலமைல்கள் தூரத்தில் இருந்தும் காண முடியும்.

[11]கேலன் என்பவர் ஹிப்போக்கிரேட்டஸுக்கு (கி.மு. 460-377) இரண்டாமவராக மாத்திரமே மதிப்பிடப்பட்டார், இவர்(கேலன்) "மருந்துகளின் தந்தை" என்று அறியப்பட்டுள்ளார். மனித உடற்கூறியலின் துறையில் தனது பணிக்காகக் கேலன் நன்கு அறியப்பட்டுள்ளார். அவரது புத்தகங்கள் பதிமூன்று நூற்றாண்டுகள் அளவாக இந்தப் பாடக் கருத்தின்மீது அதிகாரத்துவம் உடையவைகளாய் இருந்தன. [12]பெற்றுக்கொண்ட சிகிச்சைமுறைகளைக் கல்வியாளர்கள், "விசுவாச குணமாக்குதல்" மற்றும் "சுய ஆலோசனை" போன்ற வார்த்தைகள் உட்பட பலவிதங்களில் விவரிக்கின்றனர். பல சுகவீனங்கள் மனம்சார்ந்தவையாக இருப்பதால் (அதாவது உடல்ரீதியான நோய்க்குறிகளைக் கொண்டிருக்கும், ஆனால் மனநிலை அல்லது உணர்வுநிலைக் காரணங்களில் இருந்து அவை தோற்றம் பெற்றிருக்கும்), இந்த மருத்துவ மையமானது "குணமாக்குதல்களில்" தனது பங்கைக் கொண்டிருந்தது. பெற்றுக்கொண்ட சிகிச்சையின் செயல்விளைவு பற்றிய பல சாட்சியங்களைப் பழங்கால எழுத்துக்களில் காண முடியும். "விசுவாச குணம் தருபவர்கள்" எனப்படுகின்றவர்கள் விளம்பரப்படுத்தப்பட்ட தங்கள் "குணமாக்குதல்கள்" மற்றும் "சாட்சியங்கள்" ஆகியவற்றுடன் (இந்தச் சிகிச்சை முறையின்) நவீனகாலப் பிரதியாக உள்ளனர். [13]சில சிகிச்சைகள் உண்மையிலேயே பயனுள்ளவைகளாய் இருந்தன: உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, ஓய்வு மற்றும், சூடான - குளிர்ந்த குளியல்கள். [14]இது இந்தப் பெயருக்கான இலத்தீன எழுத்து உச்சரிப்பாக உள்ளது. "Asclepias" என்பது கிரேக்க எழுத்து உச்சரிப்பாக உள்ளது. இந்த மருத்துவ மையம் Asclepieum என்று அழைக்கப்பட்டது. [15]பாம்பு தனது தோலை உரித்துப் போட்டுத் திரும்பவும் இளமையாகத் தோற்றம் அளிக்க முடியும் என்பதால் அது உடல் நலத்திற்கான புறதெய்வ வணக்கத்தாரின் அடையாளமாக இருந்தது. ஒரு கோலில் பின்னிப் பிணைந்துள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாம்பு(கள்) என்பது மருத்துவத் தொழிலில் இன்னமும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு அடையாளமாக உள்ளது. [16]LaMar C. Berrett, *Discovering the World of the Bible* (Nashville: Thomas Nelson Publishers, 1979), 528. [17]*Grolier Multimedia Encyclopedia*, 1997 ed., s.v. "Pergamum," by Louis L. Orlin. [18]பாப்பிரஸ் என்பது நைல் நதியின் கரையோரமாக வளர்ந்த பாப்பிரஸ் என்ற நாணற்செடியில் இருந்து தயார் செய்யப்பட்ட எழுதும் பொருளாயிருந்தது. "Paper" என்ற வார்த்தை "papyrus" என்பதில் இருந்து உருவாயிற்று. பாப்பிரஸில் இருந்து பேப்பர் எவ்வாறு செய்யப்பட்டது என்பது பற்றிய அதிகமான தகவலுக்கு, அடுத்து வெளிவரும் புத்தகத்தில் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராய் இருக்கின்றார்!" என்ற பாடத்தில் 5:1ன் மீதான கலந்துரையாடலைக் காணவும். [19]தோல்சுருள் என்பது செம்மறி ஆடு, வெள்ளாடு மற்றும் கன்றுக்குட்டி ஆகியவற்றின் தோலில் இருந்து தயாரிக்கப்பட்டது. தோல்சுருளைத் தயாரித்து மேம்படுத்தும் செயல்முறையில், தோலானது காகிதம்போல் மெல்லியதாகும் வரையிலும் இழுத்து மென்மையாக்கப்பட்டது, பின்பு அது பண்படுத்தப்பட்டது. [20]"Codex" என்ற சொற்றொடர், பக்கங்கள் கொண்ட புத்தகத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. பெர்கமுவில் இருந்த மக்களின் ஆதாரவளம் நிறைந்த தன்மையின் காரணத்தால், இந்த வெளியீட்டின் பக்கங்களை, புத்தகச் சுருளைப் போல் சுருட்டுவதற்குப் பதில் நீங்கள் இதன் பக்கங்களைத் திருப்புகின்றீர்கள்!

[21]Berrett, 529. [22]பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு இடமும் முற்றிலுமாக சாத்தானுடையவை என்று நான் கூறுவதில்லை. சாத்தான் தனது நோக்கத்தை

நிறைவேற்றுவதற்காக இவைகளிலும் இவைகளினூடேயும் கிரியை செய்து கொண்டிருந்தான் என்று மாத்திரமே நான் கூறுகின்றேன். தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நாமும் இதே இடங்களில் வேலை செய்ய முடியும், ஆனால் பெர்கமுவில் இருந்தது போல - கடினமானதாக இருக்கும். [23]இணையத்தளத்தையும் நாம் இவ்விடத்தில் கூட்டிக்கொள்ள முடியும் - இது அரசு, கல்வி மற்றும் வியாபார வலைப்பணிகளை ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தும் உலகளாவிய வலைத்தளமாக உள்ளது. [24]சில மொழிபெயர்ப்புகளில் "your faith in Me" அல்லது அதற்கு ஒப்பான வார்த்தைகள் உள்ளன, ஆனால் "விசுவாசம்" என்ற சொற்றொடர், இயேசுவை "வெறுமனே" நம்புதல் என்பதைவிட விரிவானதாக உள்ளது. இருப்பினும் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம், இயேசுவின்மீது விசுவாசம் கொள்ளுதலை(யும்) உள்ளடக்குகிறது. [25]"*Martus*" என்ற கிரேக்க வார்த்தை "சாட்சி" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இதிலிருந்தே நாம் "martyr" என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இவ்வார்த்தை, "சாட்சிகொடுக்கின்ற அல்லது சாட்சியளிக்கின்ற ஒருவர்" என்பதைக் குறிப்பிடுகிறது. சிலவேளைகளில் இந்த கிரேக்க வார்த்தை, ஒருவர் தமது விசுவாசத்திற்காக மரிக்க மனவிருப்பமாய் இருந்து சாட்சி கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. அந்திப்பா தமது விசுவாசத்திற்காக மரிக்க மனவிருப்பமாய் இருந்தபடியால், KJV வேதாகமத்தில் இவ்விடத்தில் "martyr" என்றுள்ளது. இதே வார்த்தை தங்கள் மரணத்தின்மூலம் சாட்சிகொடுத்தவர்களைக் குறிப்பிடுவதற்கு 17:6ல் மீண்டும் பயன்படுத்தப் பட்டுள்ளது. [26]KJV வேதாகமத்தில் "slain" என்றுள்ளது. கிரேக்க வினைச்சொல், வன்முறையான மரணத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. [27]இன்னொரு விவரிப்பு பயன்படுத்தப்படலாம்: ஒருவேளை, ஒருமனிதர் தமது உடல் பரிசோதனைக்காக மருத்துவரிடத்தில் செல்லுகின்றார் என்று வைத்துக் கொள்வோம். பரிசோதனைக்குப் பின்பு, அந்த மருத்துவர் அம்மனிதருக்குப் பரிசோதனையின் சாதகமான விளைவுகளை அறிவிக்கின்றார். பின்பு அவர், "ஆனால் ஒரு சில விஷயங்கள் சரியற்று இருப்பதை நான் கண்டறிந்துள்ளேன். உங்களுக்குச் சர்க்கரைவியாதி, இருதயக்கோளாறு மற்றும் புற்றுநோய் ஆகியவை உள்ளன" என்று கூடுதலாகக் கூறுகின்றார். [28]விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைப் புசித்தல் பற்றிய கேள்வியைப் பவுல் கலந்துரையாடியிருந்தார் (1 கொரிந்தியர் 8-10; ரோமர் 14; 15), ஆனால் அவரது கலந்துரையாடல், முதலில் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டு பின்பு சந்தையில் விற்கப்படும் மாமிசத்தை உண்பது பற்றிய கேள்வியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வெளிப்படுத்தின விசேஷம் 2:14ல் குறிப்பிடப்படுகிற பாவம், விக்கிரக ஆராதனையில் உண்மையாக/நேரடியாக ஈடுபடுதலைப் பற்றியதாக உள்ளது என்பது உறுதி. இது தேவனால் கண்டனம் பண்ணப்பட்டிருந்தது (மற்றும் பண்ணப்படுகிறது) (2 கொரிந்தியர் 6:16; கலாத்தியர் 5:20; 1 யோவான் 5:21). [29]"ஒழுக்கவீனமான செயல்களைச் செய்தல்" ["commit acts of immorality"] "வேசித்தனம் பண்ணுதல்" என்று (ஆங்கில வேதாகமத்தில்) மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "வேசித்தனம் பண்ணுதல்" ["to commit fornication"] என்று நேரடி அர்த்தம் தருகிறது (தமிழ் வேதாகமத்தில் இவ்வாறே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது). (KJV வேதாகமத்தில் காணவும்). புறதெய்வ வழிபாட்டில், கர்த்தரால் கண்டனம் பண்ணப்பட்ட (பண்ணப்படுகிற) பாலியல் ரீதியான ஒழுக்கவீனம் வழக்கமாக உள்ளடங்கியிருந்தது (1கொரிந்தியர் 6:13-20). [30]"இடறல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, "வலையில் இரை வைக்கப்பட்டுள்ள பாகத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. இரை எடுக்கப்படும்போது, வலை சுருண்டு, அதில் பலியாக வேண்டிய உயிரை (மிருகத்தை அல்லது பறவையை) அகப்படுத்துகிறது" (Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* [Grand

Rapids, Mich.: Baker Book House, 1979], 131).

[31]வசனம் 15ல் உள்ள (கைக்கொள்ளுகிறவர்க) 'ளும் என்பது இவ்விரு நிலைப்பாடுகளுக்கும் இடையில் உறவுகள் சில இருந்தன என்று மறைமுகமாக உணர்த்துகிறது. [32]கடைசியில் பாலாம் தானே பட்டயத்தினால் இறந்தான் (எண்ணாகமம் 31:8). [33]மீகா 6:5ஐக் காணவும். [34]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில், நிகொலாய் மதஸ்தர் பற்றிய குறிப்புகளைக் காணவும். [35]நமது பாவங்களுக்கு (அவை நிவிர்த்திக்கப்படுவதற்கு) தேவனுடைய கிருபையே போதுமானதாக உள்ளது, ஆனால் இது நாம் பாவம் செய்வதற்கு ஊக்குவித்தலாக இருக்கக் கூடாது. இந்தக் கருத்துப்பற்றி ரோமர் 6:1ல் தொடங்குகிற பவுலின் கலந்துரையாடலைக் காணவும். உண்மையான மனந்திரும்புதல் என்பது நாம் தேவனுடைய உதவியுடன் நமது வாழ்வில் இருந்து பாவத்தை நீக்கிப்போட முயற்சி செய்வதற்குக் காரணமாயிருக்கும். [36]இதை 1 கொரிந்தியர் 4:21ல் கொரிந்துவில் இருந்த சபைக்குப் பவுலின் எச்சரிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [37]"கர்த்தருடைய வருகை" என்ற கருத்தின் இரண்டு பயன்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை இந்தப் புத்தகத்தில் உள்ள "ஆண்டவரே எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் காணவும். [38]மற்ற சாத்தியக்கூறுகளும் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாக, "அவர்களோடு" என்பது கள்ளப்போதகர்களை ஒழுங்குக்கு உட்படுத்த மறுத்தவர்களாய் சபையில் இருந்த எவரையும் குறிப்பிடுவதாக இருக்கக் கூடும். [39]முன்னெச்சரிக்கை ஒழுங்கு நடவடிக்கையில் போதனையும் பயிற்சியும் உள்ளடங்கியிருக்கையில், திருத்தும் ஒழுங்கு நடவடிக்கையில், திருத்துதலும் தண்டனையும் உள்ளடங்கியிருந்தன. முன்னெச்சரிக்கை ஒழுங்கு நடவடிக்கையில் நாம் கடினமாய் உழைத்தால், திருத்தும் ஒழுங்கு நடவடிக்கை என்பது மிகக்குறைவாகவே தேவைப்படும். இருப்பினும், நாம் முன்னெச்சரிக்கை ஒழுங்கு நடவடிக்கையில் எவ்வளவு கடினமாக உழைத்தாலும், சில வேளைகளில் திருத்தும் ஒழுங்கு நடவடிக்கை அவசியமாகிறது. இது இல்லத்தில் உண்மையாக உள்ளது; இது சபையில் உண்மையாக உள்ளது. [40]சபை ஒழுங்கு நடவடிக்கையின் பல்வேறு நோக்கங்களை 1 கொரிந்தியர் 5:1, 5-7ல் காணவும்.

[41]மன்னா என்பது என்ன என்று வேதாகமம் மிகச்சரியாக நமக்குக் கூறுவதில்லை, ஆனால் இது தேவனிடத்தில் இருந்து வந்த அற்புதமான உணவு என்பதை யாத்திராகமம் 16:15 தெளிவாக்குகிறது. ''மன்னா'' என்ற எபிரெய வார்த்தை, ''இது என்ன?'' என்று அர்த்தப்படுகிறது (அல்லது குறைந்தது, மறைமுகமாக உணர்த்துகிறது) என்று எனக்குக் கூறப்பட்டுள்ளது. [42]உடன்படிக்கைப் பெட்டி என்பது தங்கத்தால் மூடப்பட்ட விசேஷித்த ஒரு பெட்டியாக, ஆசரிப்புக் கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெட்டிக்குள் பின்வரும் மூன்று பொருட்கள் இருந்தன: பத்துகட்டளைகள் எழுதப்பட்ட கற்பலகைகள், மன்னா வைக்கப்பட்ட பாத்திரம் மற்றும் ஆரோனின் தளிர்த்த கோல். [43]மன்னா என்பது உடலுக்குரிய உணவாயிருந்ததால், ''மறைவான மன்னா'' என்பது ஆத்துமாவைப் போஷிப்பதென்று குறிப்பிடுவதாய் இருக்கலாம். பல விளக்கவுரையாளர்கள் இந்த வாக்குத்தத்தத்தை, "நானே ஜீவ அப்பம்" என்ற இயேசுவின் உறுதிப்பாட்டுடன் (யோவான் 6:31, 35) பிணைக்கின்றனர். ''மறைவான'' என்ற வார்த்தை, கிறிஸ்தவருக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் உலகத்தின் கண்களில் இருந்து - அதாவது இவற்றை உலகம் பெறுவதுமில்லை, உணர்ந்தறிவதும் இல்லை அல்லது மதிப்பதும் இல்லை என்ற கருத்தில் - மறைந்துள்ளன என்று மறைமுகமாய் உணர்த்துவதாய் இருக்கலாம். [44]"கல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை இவ்விடத்திலும் நடபடிகள் 26:10லும் மாத்திரமே காணப்படுகிறது. நடபடிகள் 26:10ன் கடைசிப் பகுதியினுடைய நேரடியான மொழிபெயர்ப்பானது,

''நான் (சம்மதித்து வாக்களிக்க) கல்லெறிந்தேன்'' என்றிருக்கும். இன்றைய நாட்களிலும்கூட நாம், "*casting* our votes" என்பது பற்றி பேசுகின்றோம், மற்றும் "blackballed" என்ற சொற்றொடர் மறுக்கப்படுதலை இன்னமும் குறிக்கிறது. [45]இந்த நடைமுறையுடன் கூடுதலாக, வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், வெள்ளைக் கற்கள் பிற பயன்பாடுகளையும் கொண்டிருந்தன: அவைகள் அழைப்புகளுக்கு, வெகுமதிகளாக மற்றும் கணக்கிடுதலில் பயன்படுத்தப்பட்டன. வெள்ளைக்கல் என்பது வைரமாக இருந்தது என்று சிலர் நினைக்கின்றனர்: கார்பன்(கரி) என்ற பொருள் நீண்டகாலத்திற்கு அதிகமான அழுத்தத்திற்கு உட்படும்போது, வைரங்கள் உண்டாகின்றன, பெர்கமுவில் இருந்த கிறிஸ்தவர்கள் அதிகமான அழுத்தத்தில் இருந்தனர். [46]பிலிப்பியர் 2:9, 10ஐக் காணவும். [47]"கிறிஸ்தவர்" என்பது இந்தப் புதிய பெயராயிருப்பதற்குச் சார்பளவில் சாத்தியக்கூறு உள்ளது (ஏசாயா 62:2; நடபடிகள் 11:26) - அல்லது இந்தப் பெயர், 19:12ல் குறிப்பிடப்பட்டுள்ள அறியப்படாத பெயராக, பரலோகத்தில் நமக்கு வெளிப்படுத்தப்படவிருக்கும் பெயராய் இருக்கக்கூடும். [48]F. Whitfield, "O How I Love Jesus," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishers, 1977). [49]"இயேசு" என்பது "யோசுவா" என்ற எபிரெய வார்த்தையின் கிரேக்க வடிவமாக உள்ளது, இது "யெகோவா இரட்சிக்கின்றார்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. [50]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், விலகியிருக்கும் பாவிகள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறவேண்டிய அவசியத்தையும் (மாற்கு 16:16) தவறு செய்கின்ற கிறிஸ்தவர்கள் மீளக்கட்டி யெழுப்பப்பட வேண்டிய அவசியத்தையும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16) விளக்கப்படுத்துங்கள்.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட "இருபுறமும் கருக்குள்ள பட்டயம்" என்பது என்ன? வசனம் என்ற பட்டயத்தைப் பயன் படுத்தக்கூடிய இரு வழிமுறைகளைக் கலந்துரையாடவும்.
2. பெர்கமுவில் கிறிஸ்தவர்களைக் குறிப்பாகப் பயமுறுத்தக் கூடிய வையாய் இருந்த அமைப்புகள் சிலவற்றைப் பற்றிக் கூறவும்.
3. பெர்கமு நகரம் ''ஆசியாவில் ரோம மாகாண அரசாங்கத்தின் மையமாக இருந்தது, பேரரச வணக்கத்தை அமுல்படுத்தும் பொறுப்பைக் கொண்டிருந்தது'' என்று பாடத்தில் எடுத்துரைக் கப்பட்டுள்ளது. இது பெர்கமுவில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள்மீது இட்டிருக்கக்கூடிய வலியுறுத்தம் என்ன?
4. "சாத்தானின் அரியணை (சிங்காசனம்)" என்பது எதுவாயிருந்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? ''சாத்தானின் அரியணை (சிங்காசனம்)" பற்றி இந்தப் பாடத்தில் கருத்துத் தெரிவிக்கப்படுவது என்ன? இன்றைய நாட்களிலும் சாத்தான் தனது செல்வாக்கின் மையங்களைக் கொண்டுள்ளானா?
5. அந்திப்பா என்பவர் யார்? அவரைப் பற்றி நாம் அறிவது என்ன? அது, எந்த ஒரு நபரையும் பற்றி நாம் அறியப்போதுமானதாக

உள்ளதா?

6. பாலாம் மற்றும் பாலாக் ஆகியோரின் வரலாற்றைக் கூறத் தயா ராகுங்கள். பாலாம் இஸ்ரவேல் மக்களுக்கு எவ்வாறு வீழ்ச்சியைக் கொண்டு வந்தார்?
7. இன்றைய நாட்களில் சபையானது உலகத்துடன் சமரசம் செய்து கொள்ளும்படி சாத்தான் செய்ய முடிந்தால், இது சபைக்கு வீழ்ச்சியைக் கொண்டுவருமா? சமரசம் செய்து கொள்ளுதலின் பாவத்தை பற்றிக் கலந்துரையாடவும்.
8. நிக்கொலாய் மதஸ்தர் என்பவர்கள் யாராயிருந்தனர்? (எபேசு சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டதை மறு கண்ணோட்டம் இடுவதை உறுதிப் படுத்திக்கொள்ளவும்.)
9. புதிய ஏற்பாட்டின்படி, கள்ளப்போதகர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்?
10. பெர்கமுவில் இருந்த சபை கள்ளப்போதகர்களைக் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளாது இருந்ததற்கான சாத்தியமான சில காரணங்கள் யாவை? இன்றைய நாட்களில் சபைகள், சபை ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளாது இருப்பது ஏன்?
11. "முன் எச்சரிக்கை ஒழுங்கு நடவடிக்கை" மற்றும் "திருத்துகிற ஒழுங்கு நடவடிக்கை" ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்ன?
12. இயேசுவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "மறைவான மன்னா" "வெண்மையான கல்" மற்றும் "புதிய நாமம்" என்பவற்றைப் பற்றி நீங்கள் நினைப்பது என்ன? இயேசு நமக்கு அற்புதமான ஆசீர்வாதங்களை இருப்பில் வைத்துள்ளார் என்று அறிவதற்கு நாம், இவைகள் மிகச்சரியான என்னவாக உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமா?